13

Stands cancelled only Bio-Chemistry vide letter No 38561/M/2008-3 dt. 16/11/09.
& and G.O. Ms. No. 24 P&AR (M) Dept. dt. 4.2.11

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பொதுப்பணி – கல்வித் தகுதி – பாரதியார் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் சில அறிவியல் பட்டமேற்படிப்புகள்/பட்டப் படிப்புகளை அதே பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பிற அறிவியல் பட்ட மேற்படிப்புகள் மற்றும் பட்டப் படிப்புகளுக்கு இணையாகக் கருதி அங்கீகாரம் அளித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை

அரசு ஆணை நிலை எண்.254 நாள் : 22.10.98.

படிக்கப்பட்டது :

1. அரசு ஆணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் : 20.12.93.
2. பாரதியார் பல்கலைக் கழகப் பதிவாளரது கடித எண். B.2/3622/96, நாள் : 13.6.96.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலரது கடித எண்.5897/ஆர்.என்.டி-ஏ.5/96, நாள் : 13.5.98 மற்றும் 21.8.98.

---

ஆணை :

பாரதியார் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் அறிவியல் பட்ட மேற்படிப்புகள்/பட்டப் படிப்புகளை அதே பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் கீழ்க்கண்ட அறிவியல் பட்டமேற்படிப்புகள்/பட்டப் படிப்புகளுக்கு இணையாகக் கருதிப் பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பு பெறும் நோக்கத்திற்காக அங்கீகாரம் அளிக்குமாறு பாரதியார் பல்கலைக் கழகப் பதிவாளர் கேட்டுள்ளார் :-

| பட்டமேற்படிப்பு/பட்டப்படிப்பின் பெயர் | இணையானதாகக் கருதப்படும் பட்ட மேற்படிப்பு/பட்டப்படிப்பு |
|---|---|
| 1. தாவர அறிவியல் பட்ட மேற்படிப்பு | தாவரவியல் பட்டமேற்படிப்பு |
| 2. விலங்கின அறிவியல் பட்ட மேற்படிப்பு | விலங்கியல் பட்டமேற்படிப்பு |
| 3. உயிரின வேதியல் பட்டப் படிப்பு | வேதியல் பட்டப் படிப்பு |
| 4. நுண்ணுயிரியல் பட்டப்படிப்பு | தாவரவியல்/விலங்கியல் பட்டப்படிப்பு |

... 2

2. 20.12.93 நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (அர்)துறையின், அரசு ஆணை நிலை எண்.441-ல் ஆணையிட்டவாறு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரைத் தலைமையாகக் கொண்டு [illegible] அமைக்கப்பட்ட குழுவின் முன்பு மேற்குறிப்பிட்ட கோரிக்கை பரிசீலனைக்காக வைக்கப்பட்டது.

3. 20.3.98 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு பாரதியார் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் கீழ்க்காணும் அறிவியல் பட்டமேற்படிப்புகள்/பட்டப்படிப்புகளையும், அதற்கு இணையாகக் குறிப்பிடப்பட்டுள்ள அறிவியல் பட்டமேற்படிப்புகள்/பட்டப்படிப்புகளுக்குச் சமமாகக் கருதிப் பொதுப்பணிகளில் பணி நியமனம் பெறும் பொருட்டு அங்கீகாரம் அளிக்குமாறு அரசுக்குக் குழு பரிந்துரை செய்துள்ளது :-

| பட்டமேற்படிப்பு/பட்டப்படிப்பு | இணையாகக் கருதப்படும் பட்டமேற்படிப்பு/பட்டப்படிப்பு |
|---|---|
| 1. தாவர அறிவியல் பட்ட மேற்படிப்பு (M.Sc. Plant Science) | தாவரவியல் பட்டமேற்படிப்பு (M.Sc. Botany) |
| 2. விலங்கின அறிவியல் பட்ட மேற்படிப்பு (M.Sc. Animal Science) | விலங்கியல் பட்டமேற்படிப்பு (M.Sc. Zoology) |
| 3. உயிரின வேதியல் பட்டப்படிப்பு (B.Sc. Bio-Chemistry) | வேதியல் பட்டப்படிப்பு (B.Sc. Chemistry) |
| 4. நுண்ணுயிரியல் பட்டப்படிப்பு (B.Sc. Micro-Biology) | தாவரவியல்/விலங்கியல் பட்டப்படிப்பு (B.Sc. Botany/Zoology) |

4. குழுவின் பரிந்துரைகளைத் தீவிர பரிசீலனைக்குப் பின் ஏற்றுக்கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது. அவ்வாறு பாரதியார் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் கீழ்க்காணும் அறிவியல் பட்ட மேற்படிப்புகள்/பட்டப்படிப்புகளையும் அதற்கு இணையாகக் குறிப்பிடப்பட்டுள்ள அறிவியல் பட்டமேற்படிப்புகள்/பட்டப்படிப்புகளுக்குச் சமமாகக் கருதிப்

... 3

பொதுப்பணிகளில் பணிநியமனம் பொருட்டு அங்கீகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது:

| பட்டமேற்படிப்பு/பட்டப்படிப்பு | இணையாகக் கருதப்படும் பட்டமேற்படிப்பு/பட்டப்படிப்பு |
|---|---|
| 1. தாவர அறிவியல் பட்டமேற்படிப்பு (M.Sc. Plant Science) | தாவரவியல் பட்டமேற்படிப்பு ( M.Sc. Botany) |
| 2. விலங்கின அறிவியல் பட்டமேற்படிப்பு (M.Sc. Animal Science) | விலங்கியல் பட்டமேற்படிப்பு ( M.Sc. Zoology) |
| 3. உயிரின வேதியல் பட்டப்படிப்பு (B.Sc. Bio-Chemistry) | வேதியல் பட்டப்படிப்பு ( B.Sc. Chemistry) |
| 4. நுண்ணுயிரியல் பட்டப்படிப்பு (B.Sc. Micro-Biology) | தாவரவியல்/விலங்கியல் பட்டப்படிப்பு (B.Sc. Botany/Zoology) |

(ஆளுநரின் ஆணைப்படி)

நா. பிரகாஷ்,
அரசுச் செயலர்.

பெறுநர்
அனைத்துச் செயலர்கள், சென்னை-9.
அனைத்துத் துறை தலைமை அலுவலர்கள்.
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
பதிவாளர், பாரதியார் பல்கலைக் கழகம், கோவை-641 046.

நகல் :-
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

(signature)
பிரிவு அலுவலர்.